வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 16.04.2025 புதன்கிழமை | இதழ் : 107 | பக்கங்கள் : 12

# மாகாண சபை முறைமையை வலுப்படுத்த ஆளுநர்களின் அதிகாரத்தை குறையுங்கள்

## அமைச்சர்கள் மட்ட குழு அமைத்து ஆராயுமாறு அரசிடம் தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 16

**அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகள் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கூறியமையை வரவேற்றிருக்கும் தேசிய சமாதானப் பேரவை, மாகாண சபை முறைமையை பலப்படுத்துவதற்கு ஆளுநர்களின் அதிகாரங்களை குறைத்து மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை அளிப்பது குறித்து ஆராய அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில், "பொருளாதாரத்தை பாதுகாக்கவும் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் அவரசமான சீர்திருத்தங்கள் தேவை" என்ற தலைப்பில் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படவிருக்கும் வரிகள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுகளை நடத்துவதற்கு இலங்கைக்கு மூன்று மாத கால அவகாசம் கிடைத்திருக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளக்குவதால் இந்த வரி விதிப்பு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின்

11

## சட்டவிரோதமாக மீன்பிடித்த 13 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 16

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 13பேர் ஐந்து படகுகளுடன் கடற்படையால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோத செயல்பாடுகளை முடக்கும் நோக்கில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை கரையோரம் மற்றும் கடற்பரப்புகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று காலை கட்டைக்காட்டு கடற்பரப்பில்

11

## வரவுள்ள புதிய அரசியலமைப்பு இன மோதலுக்கு தீர்வு வழங்கும்

### அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார



கொழும்பு, ஏப். 16

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக முரண்பாடற்ற தீர்வை நிச்சயம் பெற்றுக் கொடுப்போம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து வினவிய போது அவர்

11

## அமெ. பரஸ்பர வரி அமுலாக்கத்தை இடைநிறுத்தும் காலத்தை நீடிக்குக

### ட்ரம்பிடம் கோரவுள்ளது இலங்கை அரசு

கொழும்பு, ஏப். 16

அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர தீர்வை வரி அமுலாக்கத்தின் இடைநிறுத்தக் காலத்தை நீடிக்குமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைக்கவுள்ளது.

இலங்கை மீதான பரஸ்பர தீர்வை வரியை 44 வீதமாக அதிகரித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பை வெளியிட்டதை அடுத்து, இலங்கையில் பெரும் பொருளாதார பாதக நிலை உணரப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன், இதற்கான நிபுணர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. அத்துடன் இந்த விடயம் தொடர்பில் தீர்வையும் ஒத்துழைப்பையும் கோரி

11

## வாக்காளர் அட்டைகள் இன்று அஞ்சல் திணைக்களத்திடம்!

கொழும்பு, ஏப். 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

11

## தேசிய மக்கள் சக்தி அரசை கவிழ்ப்பதற்கு சதித் திட்டம்!

### அமைச்சர் சமந்த வித்தியாரட்ன

கொழும்பு, ஏப். 16

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் சமந்த வித்தியாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்துக்கு நாட்டை மேம்படுத்தும்

11

## கம்மன்பிலவை சந்தித்தபோது கண்ணீர் விட்ட பிள்ளையான்!

கொழும்பு, ஏப். 16

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணியும் பிவிதுரு உதய கம்மன்பிலவுடன் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின்போது, பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுதார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

11

## மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண அரசு ஏன் பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தவில்லை?

### கேள்வி எழுப்புகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஏப். 16

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்தால் மாத்திரமே அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது அவரது பதவிக்கு அழகல்ல, மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் ஏன் பெரும்பான்மை பலத்தை பயன்படுத்துவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப் பினார்.

நீர்கொழும்பு பகுதியில் நடைபெற்ற

11

## பிள்ளையானை தொடர்ந்து பலர் கைது செய்யப்படுவர்!

கொழும்பு, ஏப். 16

பிள்ளையானைத் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட உள்ளதாக பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.


குற்றச்செயல்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.


இவ்வாறானவர்கள் தொடர்பிலான நீண்ட

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் வடக்கு சிறீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா புதுவருடப் பிறப்பு தினமான நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (படங்கள் பூ.பத்மலிங்கம்)

# தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் செயல்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஏப். 16

தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் செயல்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

வெளிக்கள நிலையத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஆளுநர் கடந்த காலங்களில் சிறப்பாக இயங்கிய அந்த நிலையத்தை நெறிப்படுத்தவேண்டிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன் இடையில் ஏற்பட்ட குழப்பங்களை சீர்செய்து அந்த நிலையம் தொடர்ந்து பயணிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், ஆளுநரின் கருத்தை ஆமோதித்ததுடன், 1970ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் பாரம்பரியமான நிறுவனமாக தொண்டைமனாறு வெளிக்கள நிலையம் இருக்கின்றது எனவும் தெரிவித்தார். இந்த நிறுவனத்தை மீளவும் கல்விப்புலம் சார்ந்த ஒன்றாகவும், நம்பகத்தன்மை மிக்கதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். தனிநபர்களால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மீளவும் முறையான வழிமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கல்வியோடு பின்னிப்பிணைந்த மிகப்பாரம்பரிய நிலையம் என்பதை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம. பற்றிக் டிறஞ்சன், கடந்த காலங்களில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வழியாக போசகராக இந்த நிலையத்தில் இருந்தார் என்பதையும், அவர் போசகர் என்பதற்கும் அப்பால் மேலதிகமாக சில நிர்வாக விடயங்களையும் நெறிப்படுத்தியிருந்தார் என்றும் சுட்டிக்காட்டினார். தற்போதும் வெளிக்கள நிலையத்தின் பரீட்சைகளை நடத்த அனுமதிப்பது தொடர்பில் தமக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்ட அவர், பரீட்சை, கணக்காய்வு உள்ளிட்ட விடயங்களை ஒழுங்குபடுத்தவேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

இதன் பின்னர் தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் உள்ளிட்டவர்கள் கடந்த காலங்களில் நடந்த உள்விவகாரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து முன்னர் இருந்தமையைப்போன்று பதவி வழியாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக இருப்பவரை போசகராக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும், நிலையத்தின் செயல்பாடுகள் மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படுவதை அனுமதிக்க வேண்டும் என்றும் இதைச் செயற்படுத்துவதன் ஊடாகவே எதிர்காலத்தில் தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தலாம் என முன்வைக்கப்பட்ட யோசனையை, தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் ஏற்றுக்கொண்டனர். அத்துடன் இது தொடர்பில் தமது பொதுக்குழுவிலேயே முடிவு எடுக்கலாம் எனவும் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட்டுடன் கலந்துரையாடலை நடத்தி, யாப்பு மறுசீரமைப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின்னர் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்தி ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளுமாறு ஆளுநர் அவர்கள் அறிவுறுத்தினார்.

(அ)

# மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தமிழக மீனவர் ஒத்துழைக்கவேண்டும்!



யாழ்ப்பாணம், ஏப். 16

தமிழக அரசாங்கம் அறிவித்துள்ள மீன்பிடித் தடை காலத்தில் மீனவர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இரு நாட்டு அரசாங்கங்களையும் வலியுறுத்துவதற்கு இந்திய மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பகுதியில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழகத்தின் கிழக்கு கடற்பகுதிகளில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் மீன்பிடி தடைக்காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரையில் 61 நாட்களுக்கு இந்த மீன்பிடித் தடைக் காலம் அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணத்தில் வீதியோரமாக நின்று நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தவரை வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த இரத்தினவடிவேல் இரவீந்திரன் (வயது 65) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 11ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் சைக்கிளை வீதியோரமாக நிறுத்தி நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தவேளை மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்றவரை மோதித் தள்ளியது.

அதில் குறித்த நபரும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவருமாக மூவரும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி இரவீந்திரன் உயிரிழந்துள்ளார்.

(அ)

# கஞ்சா, துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, ஏப். 16

அந்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டுத் தயாரிப்பு துப்பாக்கி மற்றும் 70 கிராம் கஞ்சா போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

46 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனு தொடர்பான தீர்ப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 16

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அந்த மனுக்கள் மற்றும் வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகளைக் குறித்த மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட சில வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இதற்கு எதிராகப் பல கட்சிகள் நீதிமன்றத்தில் நீதிக்கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

அந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையிலேயே வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், மனுக்கள் மற்றும் வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகளைக் குறித்த மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 16.04.2025 புதன்கிழமை ஈழநாடு
விசுவாவசு வருடம், சித்திரை 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்களிடம் வாக்களிக்கக் கோருவது?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தாங்கள் மட்டுமே சரியானவர்கள் - தங்களுக்கு மட்டுமே வாக்களியுங்கள் என்று கோருவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தேர்தல் அரசியலில் ஒவ்வொருவரும் தங்களை நியாயப்படுத்துவதும் மற்றவர்களை நிராகரியுங்கள் என்று கூறுவதும் வழமையான அரசியல் சங்கதிகள்தான். ஆனால், நடைபெறவுள்ள தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி அனைத்து வட்டாரங்களையும் வென்றாலும்கூட, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற முடியாது.

இலங்கை தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கின்ற போதுகூட, உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற இடங்கள் சிலவற்றை காலப் போக்கில் பாதுகாக்க முடியாத நிலைமையே ஏற்பட்டது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இப்போது நிலைமை முன்னரையும் விடவும் மோசமாக இருக்கின்றது. தற்போதைய சூழலில் தமிழ்த் தேசிய கட்சிகள் பல அணிகளாக போட்டியிடுகின்றன. ஒவ்வோர் அணியும் தாங்கள் மட்டுமே சரியானவர்கள் என்றும் கூற முற்படுகின்றனர்.

இதேவேளை, இம்முறை புதியதொரு சவாலையும் தமிழ் கட்சிகள் எதிர்கொண்டிருக்கின்றன. அதாவது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சவால். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விடாதீர்கள், அவ்வாறு வாக்களித்தால் அவர்கள் தமிழ்த் தேசிய இனப்பிரச்னை என்று ஒன்றில்லை என்று பிரசாரம் செய்வார்கள், அதனை நாம் தோற்கடிக்க வேண்டும் - என்பதே தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதான கோஷமாக இருக்கிறது. இவ்வாறான நிலைமை முன்னைய தேர்தல்களின் போது இருந்ததில்லை.

ஒரு கட்சி மக்களுக்கு நெருக்கமாக இருந்து பணியாற்றினால் மக்களிடம் அதிகம் கூற வேண்டியதில்லை. நிலைமைகளை புரிந்து கொண்டு, தங்களின் கடமையை உணர்ந்து மக்களே வாக்களிப்பார்கள். மக்களிடம் கெஞ்சும் நிலைமை ஏன் ஏற்படுகிறது என்றால் கட்சிகள் முறையாக மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பதுதான் அதன் பொருள்.

இலங்கை தமிழ் அரசு கட்சியை பொறுத்தவரையில் மக்கள் பழக்க தோசத்தில் தங்களுடைய சின்னத்துக்குத்தான் வாக்களிப்பார்கள் என்னும் நம்பிக்கை மட்டுமே, அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கிறது. இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு மக்கள் வாக்களிப்பதே ஆச்சரியமானது. ஏனெனில், கடந்த 75 வருடங்களாக அந்தக் கட்சி கூறிய விடயங்களில் எதனையுமே அடைய முடியவில்லை. ஒரு தோல்வியடைந்த கட்சியாகவே தமிழ் அரசு கட்சி ஒவ்வொரு தேர்தலையும் எதிர்கொள்கிறது. எனினும், பழக்கப்பட்ட கட்சி, தெரிந்த சின்னம் என்னும் நிலையில் கணிசமான மக்கள் வாக்களிக்கின்றனர் - குறிப்பாக பழைய தலைமுறையை சேர்ந்தவர்கள் பிறிதொரு தெரிவை நோக்கிச் செல்ல விரும்பாத காரணத்தால், தமிழ் அரசு கட்சிக்கே வாக்களிக்கின்றனர். இதன் காரணமாகவே தங்களை ஒரு பிரதான கட்சியென்று கூறிக்கொள்ளும் தகுதியை தமிழ் அரசு கட்சி பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளும் தாங்கள் முன்வைத்த விடயங்களில் எதனையும் வெற்றிகொள்ளவில்லை. வெறுமனே அறிக்கைகளை வெளியிடுபவர்களாகவே இருக்கின்றனர். உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களில் தமிழ் கட்சிகள் முன்வைக்கும் எந்தவொரு விடயத்தையும் இந்தக் கட்சிகளால் சாத்தியப்படுத்த முடியாது. அதற்கான வல்லமையும் எந்தவொரு தமிழ் கட்சியிடமும் இல்லை என்பதே உண்மையாகும். எனினும், தமிழ் மக்கள் அவர்களுடைய பொறுப்பை உணர்ந்து வாக்களிக்க வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

# யாழ்ப்பாணம் கலாசார மண்டபம் குறித்து ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 16

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனை நிர்வகிப்பதற்கான ஒழுங்குகளை முன்னெடுப்பதற்காகவும் இந்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக ஆளுநர் நா. வேதநாயகன் குறிப்பிட்டார். எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும் அளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது, யாழ். இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி கருத்து வெளியிடுகையில், இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவ குழுவின் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை. அது எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றதோ, அதற்கு அமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும். எதிர்காலத்தில் இணை முகாமைத்துவ குழுவை உள்ளூரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும் என்றும், அத்துடன் இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார். அத்துடன், கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இது சாதகமானதொரு நிலைமை என்றும் அவர் கூறினார்.

தற்போது இந்தியத் தூதரக அதிகாரிகளே பராமரித்து வரும் நிலையில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகர சபையால் அதிகாரிகளை நியமிக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். மேலும், இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை விரைவாக கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்புமாறும் ஆளுநர் பணித்தார்.

கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்ட பின்னர் அதில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.


இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ். குகதாஸ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்நேந்திரன் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-05)

# சித்திரை வருடப்பிறப்பு பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 26


யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு அலுவலகத்தில் பொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)





## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசிபலன்

ஏப்ரல் - 16 புதன்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தி

**மேடம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வுகாண்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மகரம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

# வவுனியாவில் நீச்சல் தடாகத்துக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி.

வவுனியா, ஏப். 16

வவுனியா மாவட்டத்தில் உள்ள நீச்சல் தடாகங்களை மக்கள் பயன்படுத்தும் போது அங்கு நீச்சல் தெரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்படும் என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நீச்சல் தடாகத்தில் இளைஞன் ஒருவர் பலியாகியதைய டுத்துவமனைக்குச் சென்று அவரது சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

வவுனியாவில் உள்ள நீச்சல் தடாகங்களில் நீச்சல் தெரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன. இதனால், கடந்த காலங்களிலும் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

எனவே, எவராக இருந்தாலும் நீச்சல் தடாகத்தை இயக்குவதாக இருந்தால் அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர் முன்னிலையில் மக்கள் அதனைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் நடைமுறையை வவுனியா மாவட்டத்தில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(எ-10)

# வவுனியா மருத்துவமனையின் பிரேத அறை குளிரூட்டி பழுது!

## அலட்சியமாக செயல்படும் நிர்வாகத்தினர்

வவுனியா, ஏப். 16

வவுனியா மருத்துவமனையின் பிரேத அறை குளிரூட்டி கடந்த இரு வாரங்களாக பழுதடைந்துள்ள நிலையில் அதனைச் சீரமைப்பதில் மருத்துவமனை நிர்வாகம் அலட்சியமாக இருந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குளிரூட்டி இயங்காமையால் வவுனியாவில் உயிரிழப்பவர்களின் சடலங்கள் செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனைக்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருகின்றது.

இதனால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதனை திருத்துவதற்கான முயற்சிகள் மருத்துவமனை நிர்வாகத்தால் முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்ற போதும் அது வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வவுனியாவில் நீச்சல்குளம் ஒன்றில் வீழ்ந்த இளைஞன் ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார்.

அவரது சடலத்தை செட்டிக்குளம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறும் அங்கிருந்து மீண்டும் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டுவந்து சட்ட வைத்திய பரிசோதனைகளை முன்னெடுக்குமாறும் மருத்துவமனை நிர்வாகத்தால் இறந்தவரின் உறவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்கான செலவை உயிரிழந்தவரின் உறவினர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. வறுமை நிலையில் உள்ள குறித்த குடும்பத்தினர் இது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மருத்துவமனை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார். இதற்கமைய உயிரிழந்தவரின் சடலத்தை மருத்துவமனை நிர்வாகத்தினால் செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(எ-10)

# ஜனாதிபதியின் புதுவருட உரையை சிறப்பாக ஆற்றிய 8 வயது சிறுவன்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சித்திரை புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்கும் சுதர்சன் அருணன் என்ற மாணவன் ஜனாதிபதியின் புதுவருட வாழ்த்து செய்தியை சிங்களத்தில் ஆற்றினார்.



இந்த கொண்டாட்டத்தில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவ்வாறு சிங்களத்தில் உரையாற்றிய குறித்த மாணவனின் திறமையை பலரும் பாராட்டினர்.

(எ)

# யானை மீது மோ. சைக்கிள் மோதியதில் இளைஞன் பலி

## வவுனியாவைச் சேர்ந்த இரு இளைஞர்கள் திருகோணமலையில் விபத்தில் சிக்கினர்

திருகோணமலை, ஏப். 16

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதியில் கிண்ணியா பகுதியில் யானை மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன் அவரது நண்பன் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞனின் நண்பனான 22 வயது இளைஞன் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள், யானை மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இளைஞனின் சடலத்தை திருகோணமலை பொது மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்க முயன்ற போது குளிரூட்டி பழுதடைந்து காணப்பட்டதால் சடலத்தை மூதூர் அல்லது கந்தளாய் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்வாதிகளை விரைவில் சிறைகளுக்குள் தள்ளுவோம்

## ரஜீவன் எம்.பி. திட்டவட்டம்

கிளிநொச்சி, ஏப். 16

**நாட்டிலுள்ள பல ஊழல்வாதிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.**



தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகம் பரந்தன் பகுதியில் பாராளு மன்ற உறுப்பினர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களால் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தில் நாங்கள் திருடர்களைப் பிடிக்க வேண்டியிருக்கின்றது. எனவே இனிவரும் காலங்களிலே கைதுகள் வேகமாக நடைபெற வுள்ளன.

பலர் இதில் மாட்ட இருக்கின்றனர். நாங்கள் வேண்டுமென்று ஒருவரையும் கைது செய்யவில்லை.

நாட்டிலுள்ள ஊழல்களை ஒழிக்குமாறு மக்கள் எமக்கு தீர்ப்பளித்துள்ளார்கள். அதனடிப்படையில் தாம் நாங்கள் ஊழல்வாதிகளுக்கு எதிரானவர்கள்.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக யார் செயல்பட்டாலும் அவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டும் - என்றார். (அ)

# நாட்டு மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கே உரியது!

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஏப். 16



உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் எந்த கட்சிக்கு சென் றாலும் அரசாங்கம் என்ற ரீதி யில் நாட்டு மக்களை பாதுகாக் கவேண்டியது அவசியமான விடயமாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த் தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-உள்ளூராட்சி மன்றங்க ளின் அதிகாரம் எந்த கட்சிக்கு சென்றாலும் அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டு மக்களை பாது காக்க வேண்டியது அவசிய மான விடயமாகும். ஆகவே நிர்வாக இயந்திரம் அரசியல மைப்பிற்கு அமைய செயற்பட வேண்டியது அவசியமான விட யமாகும்.

நாட்டில் அனைத்து சந்தர்ப் பங்களிலும் ஒன்றிணைந்த நாடு என்ற வகையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியிலேயே சுயா தீனமாக செயற்பட்டுள்ளது. ஆகவே ஐக்கிய தேசிய கட்சி ஒரு புறம் அரசியல் முறைமையை உருவாக்கும் கட்சியாக இருந் துள்ளது-என்றார். (அ)

# சிறிய நீர்மின் நிலையங்கள் குறித்த முடிவுக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 16

புத்தாண்டு பருவக்காலம் ஆரம்பமாகியதுடன் பல சிறிய நீர் மின் நிலையங்களின் செயல் பாட்டை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இலங்கை மின்சார சபை எடுத்த நடவடிக்கைகள் குறித்து சிறிய நீர் மின்னுற்பத்தி நிலைய ஊக்குவிப்பாளர்கள் சங்கம் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

மின்சார வலையமைப்பின் ஸ்திரத்தன்மை காரணமாக மின்சார சபையின் இந்த நட வடிக்கை இலங்கையின் எரி சக்தித் துறைக்கு கடுமையான அடியாகும். மேலும் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாகும் என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் வெளியி டப்பட்டுள்ள அறிக்கையில்-

சிறிய நீர்மின் நிலையங்கள் இலங்கையின் மின்சார கட்ட மைப்புக்கு ஒரு அத்தியாவசிய சேவையை வழங்குகின்றன, மேலும் சூரிய சக்தி மற்றும் காற்று போன்ற இடைப்பட்ட மூலங்களைப் போலல்லாமல், சிறிய நீர்மின் நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் தொடர்ச்சியான மற்றும் நம்ப கமான எரிசக்தி விநியோக மாகும்.

அதன்படி, நாட்டின் 450 மெகாவோட் சிறிய நீர்மின் உற்பத்தித் திறனை ஒரு நாளைக்கு சுமார் 8 மணி நேரம் இயக்கு வதை நிறுத்த இலங்கை மின் சார சபை எடுத்த தீர்மானமா னது, தேசிய மின் கட்டமைப் புக்கு 1.8 மில்லியன் அலகு மின் விநியோக இழப்பை ஏற்படுத் தும்-என்றுள்ளது. (அ)

# பனை, தென்னைவளக் கூட்டுறவு சங்கத்தின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல்!

## நேரில் ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

முல்லைத்தீவு, ஏப். 16

முல்லைத்தீவு - ஒட்டுசுட் டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் தமது உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதில் சிக்கல் நிலையை எதிர்கொள்வதால், குறித்த கூட் டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக் கும் தொழிலாளர்கள் பெரும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நேற்று நிலை மைகளை நேரில் சென்று ஆராய்ந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஒட்டு சுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தில் அங்கம் வகிக்கும் தொழி லாளர்கள் எதிர்நோக்கும் பிரச் னைக்குத் தீர்வு காணவும் நட வடிக்கை மேற்கொண்டார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட் டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கம் தமது விற்பனை நிலையங்க ளினூடாக தமது உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல இடர் பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும், இதனால் தமது அங்கத்தவர்கள் பாதிக்கப்பட் டுள்ளதுடன், அன்றாட வாழ் வாதாரத்திற்கு இடர்படும்நிலை யும் ஏற்பட்டுள்ளதாகவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவி கரனிடம் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒட்டுசுட் டான் - கற்சிலைமடுப் பகுதி யில் அமைந்துள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்துக்கு நேரடி யாகச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், ஒட்டு சுட்டான் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஆகி யோரைச் சந்தித்து கலந் துரை யாடி சிக்கல் நிலமைகள் குறித் துக் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஒட் டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளை ஒட்டுசுட் டான் பிரதேசசெயலகத்துக்கு அழைத்துச்சென்ற பாராளு மன்ற உறுப்பினர் ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேச செய லருடனும் கலந்துரையாடி ஒட் டுசுட்டான் பனை,தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் எதிர்நோக்கியுள்ள தமது உற்பத் திகளை சந்தைப்படுத்துவதில் காணப்படும் பிரச்னைக்குத் தீர்வு காணநடவடிக்கைமேற்கொண்டார்

# சிறைச்சாலை அதிகாரி சுட்டுக்கொலை சந்தேகநபர் விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஏப். 16

பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதி காரி ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவத்துடன் தொடர் புடைய பிரதான துப்பாக்கி தாரி போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி தாய்லாந்துக்கு தப்பிச்செல்ல முயன்றபோது கட்டுநாயக்க விமான நிலையத் தில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பலாங் கொடை, குளிவத்த பிரதே சத்தில் வசிக்கும் விஜேமுனி லலன்த பிரிதிராஜ் குமார என்பவர் ஆவார். சந்தேக நபர் நேற்று காலை 07.50 மணியள வில் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தை நோக்கிச் செல்வதற் காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது சந்தேக நபரி டம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர் கொண்டு வந்த கடவுச்சீட்டு போலியா னது என தெரியவந்துள்ளது.

பின்னர் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், அவர் பாதாள உலக கும்பலின் தலை வரான கரந்தெனிய சுத்தா என்பவரின் பிரதான துப்பாக்கி தாரி ஒருவர் என தெரியவந்துள் ளது. (அ)

# புத்தாண்டில் எண்ணெய் வைத்து நீராடும் அரசவிழா

கொழும்பு, ஏப். 16

சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நடைபெறும் தலையில் எண்ணெய் வைத்து நீராடும் வருடாந்த அரச அபி ஷேகச் சடங்கு இன்று புதன் கிழமை காலை 9:04 மணிக்கு நடைபெறவுள்ளது. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு இந்த நிகழ்வை ஏற் பாடு செய்துள்ளது.

மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயகர்கள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

அமைச்சர்கள் அரச உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலா பங்கொள்வார்கள் என்று ஊடக அமைச்சு தெரிவித்துள் ளது. சித்திரைப் புத்தாண்டுக்கு அடுத்து வரும் நல்ல நேரத்தில் தலையில் எண்ணெய் வைத்து நீராடுவது சிங்கள மக்களின் மரபாகும். எண்ணெய் வைத்து நீராடிய பின்னரே அவர்கள் தங்கள் வழமையான பணிக ளுக்குச் செல்வர். (அ)

# 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழிலுக்காக வெளிநாடு பயணம்

கொழும்பு, ஏப். 16

கடந்த வருடத்தில் மாத் திரம் 314,828 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுக ளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கையானது 5.8 வீதம் அதிகமாகுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2023ஆம் ஆண்டில் 297,656 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுக ளுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 34 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஏப். 16

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 34 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநா யக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் கொழும்பு பிரதேசத் தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஆவர்.

சந்தேக நபர் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 05.30 மணி யளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இதன்போது, விமான நிலையச் சுங்க அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பய ணப்பொதிகளிலிருந்து 22,800 வெளிநாட்டு சிகரெட் டுகள் அடங்கிய 114 சிகரெட் காட்டுன் கள் கைப்பற்றப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை மில்லியன் இலங்கையர் அமெரிக்க வரியினால் பாதிப்பு!

### பேராசிரியர் சுரங்க சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 16

**இலங்கை மீது அமெரிக்கா மீண்டும் இடைநிறுத்தப்பட்ட வரியை விதித்தால், அது நாட்டின் ஆடைத்துறையில் பணி புரியும் சுமார் அரை மில்லியன் பணியாளர்களை பாதிக்கும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் சுரங்க சில்வா தெரிவித்துள்ளார்.**

குறித்த பணியாளர்கள் வேலை இழந்தால், சமூக வளர்ச்சியும் பாதிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

44 வீத வரி என்பது மிக அதிகமாக உணரக்கூடிய வரியாக காணப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இருந்து அதிகளவில் ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை மிகவும் தரம் வாய்ந்த ஆடைகளாகும்.

இதனால் இலங்கையின் ஆடை தொழிற்துறைக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும் என குறிப்பிடப்படுகின்றது.

கடன் செலுத்தி வரும் இலங்கைக்கு இது பொருளாதாரத்தின் மிகப்பெரிய தாக்குதலாக காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# முன்விரோதத்தினால் ஏற்பட்ட தகராறில் இளைஞர் கொலை!

கொழும்பு, ஏப். 16

கண்டி - கலஹ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டகேபிட்டிய பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக கலஹ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. நவனெலிய, கொலபிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்விரோதம் காரணமாக ஏற்பட்ட தகராறின்போது இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் கொலபிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பேராதனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# வருடப் பிறப்பு விபத்துகளில் கொழும்பில் 80 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 16

புது வருடப் பிறப்பான நேற்று முன் தினம் ஏற்பட்ட விபத்துக்கள் காரணமாக காயமடைந்த சுமார் 80 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 30 பேர் வாகன விபத்துக்கள் காரணமாக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பட்டாசு தொடர்பான விபத்து ஒன்றில் காயமடைந்த ஒருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# நெடுஞ்சாலைகளில் திங்களன்றும் ரூ.39 மில்லியன் வருவாய் கிட்டியது!

கொழும்பு, ஏப். 16

அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக கடந்த 4 நாட்களில் 17.4 கோடி ரூபாவுக்கு அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை 17.4 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த காலப்பகுதியில் சுமார் 5 இலட்சம் வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிவேக நெடுஞ்சாலைகளினூடாக நேற்று முன்தினத்தில் மாத்திரம் 19,637 வாகனங்கள் பயணித்துள்ள நிலையில், அதன் மூலம் 39 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது செய்யப்படாமை ஏன்?

### கேள்வி எழுப்பும் தென்னிலங்கை கட்சிகள்

1-12.PDF:11

கொழும்பு, ஏப். 16

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்யப்படவில்லை என்று முன்னிலை சோசலிசக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பட்டலந்த சித்திரவதை மையத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் சித்திரவதைகளில் ஈடுபட்டதை தான் நேரில் கண்டதாக தனது கட்சியின் மத்திய குழு உறுப்பினர் இந்திரானந்த டி சில்வா குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைப்பாடு அளித்துள்ளதாகக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ கூறினார்.

முன்னதாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு இளைஞர் ஸ்ரிக்கர் ஒட்டிய தற்காக கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், முறைப் பாடு கிடைத்துள்ள நிலையில், ரணிலை ஏன் கைது செய்ய முடியாது என்று துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பினார். (அ)

# உள்ளூராட்சி சபை தேர்தல் இதுவரை 164 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 16

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி) 164 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 130 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 34 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 16 வேட்பாளர்களும் 57 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# மின் கட்டணம் குறைக்கப்பட்டும் 148.6 பில்லியன் ரூபாய் இலாபம்!

கொழும்பு, ஏப். 16

மின்சாரக் கட்டணம் இரண்டு சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்ட போதிலும், கடந்த ஆண்டு 148.6 பில்லியன் ரூபாயினை இலங்கை மின்சார சபை இலாபமாக ஈட்டியுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 292.8 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட இலங்கை மின்சார சபையின் குறுகிய கால கடன்கள் மற்றும் பொறுப்புகள் 2024 ஆம் ஆண்டில் 123.6 பில்லியன் ரூபாவாக குறைவடைந்துள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதே போன்று நீண்டகால கடன்கள் 413.3 பில்லியன் ரூபாவில் இருந்து 409 பில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது.

அதேநேரம், இலங்கை மின்சார சபை அதன் செலவுகளைக் குறைக்கா மல் மேலும் கட்டணக் குறைப்புகளை மேற்கொள்ளக்கூடாது என மத்திய வங்கி அதன் வருடாந்த பொருளாதார மதிப் பாய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டி யுள்ளது.

அவ்வாறு இல்லாத நிலையில் இலங்கை மின்சார சபையின் நிதி செயல்திறன் குறையலாம் என மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டு இலங்கையில் உற்பத்தியான மொத்த மின்சாரத்தில் 32.6 வீதம் அனல் மின்னுற்பத்தியின் ஊடாகவும், 32.3 வீதம் நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் ஊடாகவும் பெறப்பட்டுள்ளது.

21.2 வீத மின்னுற்பத்தி பாரம்பரியமற்ற முறைமைகளின் அடிப்படையிலும், 13.9 வீத மின்சாரம் எரி பொருளைக் கொண்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கிய தெரி வித்துள்ளது. (அ)

# மிஹிந்தலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 16

அநுராதபுரம் - மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெல்லமொராண பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கப் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் கப் வாகனத்தின் சாரதியும் அதில் பயணித்த நபரொருவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இருவரும் மிஹிந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கப் வாகனத்தின் சாரதி உயிரிழந்தார்.

அதில் பயணித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை நோக்கிப் பயணித்த கப் வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மற்றும் பலுகஸ்வெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25 மற்றும் 37 வயது டைய இருவரே உயிரிழந்துள்ள தாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# வெள்ளவாய கொலை சம்பவம் இளைஞர் ஒருவர் கைதாகினார்

கொழும்பு, ஏப். 16

மொனராகலை - வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரணவராவ சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அதிகாலை நபரொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் வெள்ளவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வெள்ளவாய ரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் வெள்ளவாய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான இளைஞர் ரணவராவ சந்தியில் வைத்து நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெள்ளவாய ரந்தெனிய பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞர் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவாய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த அடையாளங்கள் வட மாகாணத்தில் அழிப்பு

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 16

"வடக்கு, கிழக்கில் தாயக கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள். அதனால்தான் அவற்றை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் அழித்துவருகின்றனர்." என்று பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடக்கில் தாயக கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள் - அடையாளங்கள். அதனால்தான் வடக்கிலுள்ள பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த சின்னங்களை அழித்து, அதற்கு மேல் கோவில்களை அமைத்து, அங்கு பழைய கோவில்கள் இருந்தன எனக் கூறிவருகின்றனர்.

இலங்கை பௌத்த நாடாகும். திஸ்ஸ விகாரையில் திறப்பு விழாவொன்றை நடத்த முடியவில்லையெனில், தமிழர்கள் கூச்சலிடுகின்றனர் என்பதற்காக பிக்குகளுக்கு தானம் வழங்க முடியவில்லை யெனில் என்ன நியாயம்? தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புத்த சாசனம் பாதுகாக்கப்ப டவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை இலங்கையில் தேசிய கீதம் இரு மொழிகளில் இசைக்கப்படுகின்றது. இது பெரும் தவறாகும். அரசியலமைப்பை மீறும் செயலாகும். இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன. ஆனால் பெங்காலி மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. அனைத்து மொழிகள் பேசுபவர்களும் தேசிய கீதம் இசைக்கப்படும் போது உணர்வுபூர்வமாக இருப்பார்கள்-என்றார். (அ)

# இலங்கை கடவுச்சீட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

கொழும்பு, ஏப். 16

இலங்கை கடவுச்சீட்டு சற்று முன்னேற்றம் கண்டுள்ளதாக புதிய புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. டுபாயை தளமாகக் கொண்ட உலகளாவிய ஆலோசனை நிறுவனமான நோமட் கேபிடலிஸ்ட் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கைக் கமைய, இலங்கை கடவுச்சீட்டு முன்னேற்றம் கண்டுள்ளது.

அந்த அறிக்கைக்கமைய, இலங்கை 171ஆவது இடத்திலிருந்து 3 இடங்கள் முன்னேறி 168ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

199 நாடுகளை அடிப்படையாக கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு அயர்லாந்து உலகிலேயே மிகவும் அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட் டாக பெயரிடப்பட்டுள்ளது.

இரண்டாவது இடத்தில் சுவிற்சர்லாந்து மற்றும் கிரீஸ் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுளளது. (அ)

# எல்பிட்டிய பகுதியில் விபத்து; ஆறு வயது சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 16

அம்பலாங் கொடையிலிருந்து எல்பிட்டிய பகுதியில் ஓட்டோ எதிர்த்திசையில் இருந்து வந்த வான் ஒன்றின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்து நேற்று அதிகாலையில் இடம்பெற்றது. விபத்தில் ஆறு வயதுச் சிறுமி உயிரிழந்ததுடன் 6 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்தில் காயமடைந்த ஓட்டோச் சாரதி பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஆண் பயணி, இரண்டு பெண்கள் மற்றும் மூன்று சிறுமிகள் எல்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒரு சிறுமி உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மீதமுள்ளவர்கள் எல்பிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் உயிரிழந்த சிறுமி 6 வயதுடையவர் என்றும், அவர் குருந்துவத்த, பிடிகல பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுளளது. சடலம் எல்பிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# வீட்டு மாடியிலிருந்து கீழே குதித்த சிறுவன் படுகாயம்!

கொழும்பு, ஏப். 16

வாழைத்தோட்டம், பீர் சாய்பு வீதியில் உள்ள ஒரு வீட்டின் இரண்டாவது மாடியிலிருந்து கீழே குதித்து சிறுவன் ஒருவன் காயமடைந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த 12 வயதுச் சிறுவன் தற்போது கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த சிறுவன் கடந்த 13ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் வசிக்கும் மற்ற இரண்டு சிறுவர்களுடன் ஒரு கடைக்குச் சென்றிருந்தான். அந்தக் கடைக்கு அருகில் அமைந்துள்ள மூன்று மாடி வீட்டின் வாயிலை அவன் தட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்போது, அந்த வீட்டில் வசிக்கும் ஒரு நபர் சிறுவனை வலுக்கட்டாயமாக வீட்டுக்குள் தூக்கிச் சென்று இரண்டாவது மாடியில் உள்ள அறையில் அடைத்து வைத்துள்ளார்.

பயந்து போன சிறுவன் அந்த அறையின் ஜன்னலைத் திறந்து கீழே குதித்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் முக்கிய சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பியோடியுள்ள நிலையில் இதற்கு உதவியாக இருந்த 59 வயதுடைய ஒரு நபரை வாழைத்தோட்டம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தப்பியோடிய சந்தேக நபரை கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (அ)

# அதிகமாக தண்ணீர் பருகுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 16

இந்த நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவும் என்பதால் கவனம் செலுத்துமாறும் அதிகளவில் தண்ணீரைப் பருகுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு, வட மத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இந்த உயர் வெப்பநிலை அதிகமாக இருப்பதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உடலை நீண்ட நேரம் வெப்பத்தில் வெளிப்படுத்துவது நீரிழப்பு, தசைச்சிதைவு, அதிகப்படியான சோர்வு மற்றும் பக்கவாதத்துக்கு வழி வகுக்கும் என்றும், வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இது குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்றும் துறைசார் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுபோன்ற கடுமையான வெப்பநிலை தொடர்ந்தால், பொதுமக்கள் அதிக அளவு தண்ணீர் குடிக்கவும், கடுமையான செயல்பாடுகளை குறைக்கவும், நிழலான பகுதிகளில் தங்கவும் அறிவுறுத்தப்பட் டுள்ளது. (அ)

# பிரதான வீதியில் கார்ப் பந்தயம் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, ஏப். 16

ஹோமாகம - புறக்கோட்டை பிரதான வீதியில் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் கார்ப் பந்தயம் ஒன்றை நடத்தியமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் தமிழ், சிங்கள புதுவருடத்தின் புண்ணிய காலத்தில் இந்த போட்டியை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. போட்டியை ஏற்பாடு செய்தவர்களுக்கும், இதில் கலந்து கொண்ட அனைவருக் கும் எதிராகக் கடுமையான சட்டம் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# மதுபோதை சாரதிகளை கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஏப். 16

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருளைப் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கையும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாக னம் செலுத்துவதைத் தவிர்த் துக் கொள்ளுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# தேர்தல் பிரசாரமாக மாறவுள்ள மே தினம்!

கொழும்பு, ஏப். 16

எதிர்வரும் மே முதலாம் திகதியன்று சர்வதேச தொழிலாளர் தின கூட்டத்தையும், பேரணியையும் தேர்தல் பிரசார கூட்டமாக பிரதான அரசியல் கட்சிகள் பயன்படுத்தவுள்ளன.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மே 3 ஆம் திகதி நள்ளிரவுடன் பிரசார போர் முடிவுக்கு விரும்.

வழமையாக இறுதிப் பிரசாரக் கூட்டத்தை பிரதான கட்சிகள் பிரமாண்டமாக நடத்தவது வழமை. கட்சி தலைமை உட்பட கட்சியின் பிரதான பேச்சாளர்கள் பங்கேற்பார்கள்.

இம்முறை தேர்தலுக்கு முன்னர் மே தினம் வருவதால் அதனை பிரதான பிரசார கூட்டமாக கட்சிகள் பயன்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் பிரமாண்டமாக நடத்துவதற்கு கட்சிகள் திட்டமிட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

அதேவேளை, தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும். அவ்வாறான நிகழ்வுகளும் இம்முறை தேர்தல் பிரசாரமாக மாறும் நிலை காணப்படுகின்றது. (அ)

# பயணிகளின் தேவைக்கு ஏற்ப நேற்று முதல் பஸ் சேவைகள்!

கொழும்பு, ஏப். 16

பயணிகளின் தேவைகளுக்கு ஏற்ப நேற்று முதல் பஸ்களை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வழக்கமான கால அட்டவணையின் கீழ் நேற்றும் இன்றும் பஸ்கள் இயக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் சேவை மேற்பார்வை பணிப்பாளர் ஷெரீன் அத்துக்கோரள தெரிவித்ததார்.

நாளை முதல், சொந்த ஊர்களுக்கு சென்ற பயணிகளின் வசதிக்காக விசேட பஸ் சேவை ஒன்று செயல்படுத்தப்படவுள்ளதாகவும் ஷெரீன் அத்துக்கோரள குறிப்பிட்டார்.


இதேவேளை, நேற்று வழக்கமான அலுவலக நாளாக இருந்ததால், அலுவலக ரயில்கள் வழமை போல் இயக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் தேவைகளுக்கு ஏற்ப குறித்த ரயில்கள் இயக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கட்சி ஆதரவாளர்கள் சம்மாந்துறையில் மோதல்

## வேட்பாளரும் அவரது சகோதரரும் மருத்துவமனையில்




சம்மாந்துறை, ஏப். 16

**தேசிய காங்கிரஸின் சார்பில் வீரமுணை வட்டார வேட்பாளராக போட்டியிடும் சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ. சி. எம். சஹீலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தாக்கியதாக தெரிவித்து சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.**

தனது அலுவலகத்தின் முன்னால் தனது ஆதரவாளர்கள் சகிதம் தான் நின்றபோது சம்மாந்துறை பிரதேச சபையில் ஏனைய வட்டாரத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் அவரின் ஆதரவாளர்களும் தனது காரியாலயத்துக்கு வந்து காட்டுமிராண்டித்தனமாக தன்னையும் தனது சகோதரனையும் தாக்கினார்கள் என்று சஹீல் கூறினார். சகோதரனுக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தனது அலுவலகமும் சேதமாக்கப்பட்டுள்ளது என்றும் வேட்பாளர் சஹீல் தெரிவித்தார்.

இந்த அராஜக அரசியலை ஒழித்து கட்டவே நாங்கள் போட்டியிடுகிறோம். இந்த அடாவடி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன்- என்றார். தாக்குதலுக்குள்ளாகி சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களை பார்வையிட தேசிய காங்கிரஸின் தலைவர், முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா உட்பட அந்தக் கட்சியினர் சென்றிருந்தனர். (எ- 06)



# பள்ளிவாசலின் அபிவிருத்திக்கு முன்னாள் எம். பி. ஹரீஸ் உதவி

சம்மாந்துறை, ஏப். 16

சம்மாந்துறை மல்வத்தை - 03 மஜீட்புரம் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் சென்று, தனது டி- 100 திட்டத்தின் ஊடாக சுமார் 2. 7 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்று வரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டார்.

மஜீட்புரம் ஜும்மா பள்ளிவாசலின் முகப்பு தோற்ற வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட டி-100 திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் அந்த வேலைத் திட்டத்தின் எதிர்காலத் தேவைகள் தொடர்பாகவும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் ஹரீஸ் கலந்துரையாடினார். (எ)

# ஆரோக்கிய நகரம் பற்றி விசேட கலந்துரையாடல்




சாய்ந்தமருது, ஏப். 16

கழிவுகள் அற்ற ஆரோக்கிய நகரம் - திண்மக் கழிவு முகாமைத்துவ அணுகுமுறை எனும் தலைப்பிலான செயலமர்வும் விசேட கலந்துரையாடலும் நேற்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர்கூடத்தில்நடைபெற்றது.

பொறியியலாளர் கமால் நிஷாத் ஒருங்கிணைப்பில், சமூக அபிவிருத்திக்கான அமையம் ஏற்பாடு செய்த இந்த செயலமர்வில் கொழும்பு மாநகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பொறியியல் பிரிவு பணிப்பாளர் சஹினா மைஸான் வளவாளராக கலந்து கொண்டார்.

கொழும்பு மாநகர சபை, கழிவு முகாமைத்துவம் செய்வதில் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட விதம் குறித்த விளக்கங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், கல்முனை மற்றும் அதனை அண் மித்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றுக்கான சாதகமான தீர்வுகள் மற்றும் இங்குள்ள நிறுவனங்கள் பின்பற் றும் சிறந்த நடைமுறைகள் குறித்த கேள்வி பதிலுடன் கூடிய நிகழ்வாக இது அமைந்திருந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இந்த நிகழ்வில், கல்முனை ஆதார மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் மற்றும் மருத்துவ மனை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அத்துடன் கல்முனை, சாய்ந்தமருது உட்பட இப்பிராந்தியத் தைச் சேர்ந்த அரச, பொது மற்றும் தன்னார்வ அமைப்புகள் உட்பட ஊடக நிறுவனப் பிர திநிதிகளும் சிவில் சமூகச் செயல் பாட்டாளர்களும் சமூக ஆர்வ லர்களும் கலந்து கொண்டனர். (எ-06)

# “வன்முறை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க உளளூராட்சி தேர்தலை பயன்படுத்த வேண்டும்”

சம்மாந்துறை, ஏப். 16

வன்முறை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்று தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாய்க்குட்டியர் சந்தி அருகில் நேற்று முன்தினம் இரவு இரண்டு அரசியல் கட்சிகளுக்கிடையே பெரும் மோதல் இடம்பெற்றுள்ளது. இது அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முதலாவது வன்முறை சம்பவமாக கருதப்படுகின்றது. குறித்த சம்பவத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவாளர்கள் சிலர் தேசிய காங்கிரஸின் வேட்பாளரின் அலுவலகத்துக்குள் புகுந்து அங்கிருந்த வேட்பாளரை தாக்கிவிட்டு பொருட்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவத்தில் தாக்குதலுக்கு உட்பட்டு காயமடைந்த நபர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள உதுமான் கண்டு நாபீர் மேலும் கூறுகையில்,

நீண்டதொரு அரசியல் வரலாற்றை கொண்ட எமது மண்ணில் இவ்வாறான புதிய கட்சிகளின் வருகையால் இடம்பெறும் வன்முறை கலாசாரங்கள் சம்மாந்துறை அரசியலுக்கு பெரும் இழுக்காகும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான சட்ட திட்டங்களை இறுக்கமாக கடைப்பிடிப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறான அரசியல் கலாசாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு வருவதனால் மக்களிடம் காணப்படுகின்ற ஜனநாயக தேர்தல் முன்னெடுப்புகள் அனைத்துமே குழிதோண்டி புதைக்கப்படும். வன்முறை அரசியல் கலாசாரத்தை விதைப்பதற்கு இவ்வாறான சம்பவங்கள் கால்கோள் அமைக்கின்றன. மக்கள் ஜனநாயக தேர்தலை எதிர்கொண்டு நேர்மையான அரசியல் வாதிகளை இனம்கண்டு அவர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்வதற்கு இவ்வாறான சம்பவங்கள் தடையாக அமைகின்றன. இலஞ்ச அரசியல், வன்முறை அரசியல் மற்றும் அரசியல் முகவர்களின் ஊடாக வாக்குகளை பணம் கொடுத்து பேரம் பேசி பெற்றுக் கொள்கின்ற ஊழல் அரசியல் என்பனவற்றை சமூகத்தில் கொண்டு வந்து விதைக்கின்றவர்கள் அல்லது பரப்புகின்றவர்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருந்து அவைகள் அனைத்தையும் புறந்தள்ளி நேர்மையான அரசியல் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட முறையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொண்டு வாக்களிக்க முன்வர வேண்டும்.

அரசியலில் பெரும் தலைவர்களால் வழிநடத்தப்பட்ட சம்மாந்துறை சமூகம் இவ்வாறான வன்முறை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பயன்படுத்த வேண்டும். புதிய நேர்மையான அரசியல் வாதிகளுக்கு இடம் கொடுத்து ஊழல் அரசியல்வாதிகளை இதற்கு முன்னர் உள்ள தேர்தல்களில் வீட்டில் அமர வைத்தது போன்று இந்தத் தேர்தலையும் பயன்படுத்தி இவ்வாறானவர்களுக்கு சாவு மணி அடிக்க வேண்டும். சேவை மனப்பாங்கோடு மக்கள் மனதில் இடம் பிடித்து சேவையாளர்களையும் இளைஞர்களையும் நல்லவர்களையும் சமூகத்தின் முன்னால் தேர்தலில் தெரிவு செய்து அவர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்புவதன் ஊடாக எதிர்கால அரசியலில் சிறந்த ஜனநாயகத்தை உருவாக்கி அமைதியான தேர்தல் இடம்பெறுவதற்கு அரசும் மக்களும் அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (எ-01)

# மருதமுனை சுனாமி குடியேற்ற உள்ளக வீதிகள் புனரமைப்பு

மருதமுனை, ஏப். 16

அம்பாறை மாவட்டம், மருதமுனை பிரான்ஸ் சிற்றி பிரதேசத்தில் அமைந்துள்ள சுனாமி குடியேற்ற உள்ளக வீதிகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச். எம். எம். ஹரீஸின் டி-100 திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மருதமுனையில் 65 மீற்றர் சுனாமி வீட்டுத் திட்டத்தின் மேட்டுவட்டை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மைய வாடி வீதி பாவனைக்கு பொருத்தமற்றதாக மக்களால் சுட்டிக் காட்டியதையடுத்து அவ்வீதியை சீரமைக்க ஹரீஸ், டி-100 திட்டத்தின் கீழ் சுமார் 5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்து அவ்வீதியின் புனரமைப்பு பணிகளும் மக்களின் பாவனைக்கு ஏற்றாற் போன்று நடைபெற்றுள்ளது. (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹவுதி கிளர்ச்சியாளர்களின்மீது அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்

## ஏமனில் 7 பேர் உயிரிழப்பு

சனா, ஏப். 16

**ஏமனில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், 7 பேர் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையிலான போரில் ஹமாஸூக்கு ஆதரவாக ஏமனில் செயல்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை சமாளிப்பதற்காக, அமெரிக்காவின் அதி நவீன போர்க் கப்பல்கள் செங்கடலில் நிறுத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அதிக முள்ள பகுதியான பனா கடார் நகரை குறிவைத்து அமெரிக்க போர்க்கப்பல்கள் ஏவுகணைகளை வீசி சரமாரி தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 7 பேர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 30 பேர் படுகாயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# கொங்கோவில் வன்முறை பொதுமக்கள் 52 பேர் பலி!

கின்ஷாசா, ஏப்.16

கொங்கோவில் வெடித்த திடீர் வன்முறையால் பொது மக்கள் 52 பேர் உயிரிழந்தனர்.

கொங்கோவில் பல ஆண்டுகளாக அரசுக்கும், ருவாண்டா நாட்டின் ஆதரவு பெற்ற எம். 23 என்ற கிளர்ச்சியாளர் அமைப்புக்கும் இடையே மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த மோதலானது, உலகளவில் மனித குலத்துக்கு மிகப் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி மோசமடைய செய்த நிலையில், 70 இலட்சம் பேர் தங்களைப் பாதுகாத்து கொள்ள புலம்பெயர்ந்து சென்றனர்.

இந்த நிலையில், கிழக்கு கொங்கோவின் கோம பகுதிக்கு கிளர்ச்சியாளர்கள் முன்னேறினர். கடந்த வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் மீண்டும் மோதல் வெடித்தது. இதில், அந்த பகுதியின் மிக பெரிய நகரான கோம பகுதியில் இடம்பெற்ற மோதலில் 52 பேர் கொல்லப்பட்டனர்.

கைஷீரோ மருத்துவமனையின் உள்ளே சென்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

# நெருப்புடன் விளையாடாதீர்கள்!

## ஷேக் ஹசீனா எச்சரிக்கை



டாக்கா, ஏப். 16

நெருப்புடன் விளையாடினால், அது உங்களையும் சேர்த்து எரித்து விடும் என்று ஷேக் ஹசீனா எச்சரித்துள்ளார்.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். கடந்த ஒகஸ்ட் முதல் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள ஷேக் ஹசீனா, அவ்வப்போது காணொளி வாயிலாக தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றி வருகிறார். அந்த வகையில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், "தனது அதிகாரப்பசிக்காக வெளிநாட்டு சக்திகளுடன் கை கோர்த்து தேசத்தை வீழ்ச்சி அடைய வைத்துள்ளார் முகமது யூனுஸ். பங்களாதேஷின் சுதந்திர போராட்டம் தொடர்பான அனைத்து சின்னங்களும் அகற்றப்பட்டுள்ளன. சுதந்திரப் போராட்டக்காரர்கள் இழிவு படுத்தப்பட்டுள்ளார்கள். சுதந்திர போராட்டக்காரர்களின் நினைவுக்காக அனைத்து மாவட்டங்களிலும் வளாகங்கள் கட்டுப்பட்டுள்ளன. ஆனால், அவைகள் எரிக்கப்பட்டுள்ளன.

முகமது யூனுஸ் இதை நியாயப்படுத்துகிறாரா? நீங்கள் நெருப்புடன் விளையாடினால், அது உங்களையும் சேர்த்து எரித்து விடும். அதிக அளவு கடன் வாங்கும் அந்த நபர், அதிகாரப் பசி, பணப் பசிக்காக, வெளிநாட்டு பணத்தை வைத்து நாட்டை அழிக்கிறார். பங்களாதேஷ் தேசிய கட்சி மற்றும் ஜமாத் இ இஸ்லாமி கட்சியை சேர்ந்தவர்கள் அவாமி லீக் தலைவர்களை துன்புறுத்துகிறார்கள்"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# நேபாளத்தில் நிலநடுக்கம்

காத்மண்டு, ஏப். 16

நேபாளத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 04.39 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.0 ஆக பதிவானது.

அந்நாட்டின் கோஷி மாகாணம் ஜாப்பா மாவட்டத்தில் 25 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன.

இதேவேளை, இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்போ, பொருள் சேதமோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த மாதம் மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 3500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)

# இந்திய விமானப்படையின்மீது மியன்மாரில் சைபர் தாக்குதல்

நய்பிடாவ், ஏப். 16

மியன்மாரில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளில் இந்திய விமானப்படை விமானங்கள் ஈடுபடுட்டுள்ளன. இந்த நிலையில், இந்திய விமானப்படை விமானம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மியன்மாரில், கடந்த மாதம் 29ஆம் திகதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அடுத்தடுத்த நிலநடுக்கத்தால் மியன்மார் உருக்குலைந்தது.

இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 3 ஆயிரத்தை கடந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் படையினர் முழு வீச்சில் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்தியாவும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், இந்திய விமானப் படை விமானத்தின் சிக்னல்கள் மீது நடுவானில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதலால் குழப்பமடைந்த விமானிகள், அவசர கால சிக்னல்களை பயன்படுத்தி உண்மை நிலவரங்களை அறிந்து பத்திரமாக விமானத்தை செலுத்தியுள்ளனர். சிறிது நேரத்தில் சைபர் தாக்குதலை படையினர் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர். மியன்மாரில் நிவாரணப் பணிகளில் 6 இந்திய விமானங்கள் ஈடுபட்டுள்ளன. (எ)

# அமெரிக்காவுக்கு கனிமங்கள் ஏற்றுமதியை நிறுத்தியது சீனா

பீஜிங், ஏப்.16

அமெரிக்காவுக்கு கனிமங்கள், உலோகம், காந்த பொருட்கள் ஏற்றுமதியை சீன அரசு நிறுத்தியுள்ளது. இதனால், அமெரிக்காவில் இராணுவத் தளவாட உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல், அமெரிக்காவுக்கு முன்னுரிமை என்ற கொள்கையுடன் செயல்பட்டு வருகிறார் டொனால்ட் ட்ரம்ப். இதைத் தொடர்ந்து உலக நாடுகளிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதியாகும் பொருட்களுக்கு இறக்குமதி வரியை அதிகரித்து அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி முதல் புதிய வரிவிதிப்பு அமுலாக இருந்த நிலையில், வர்த்தகப் போர், சர்வதேச பங்குச் சந்தைகளின் சரிவு, உலகளாவிய பொருளாதார மந்த நிலை ஆகியவற்றின் காரணமாக அதை 90 நாட்களுக்கு ட்ரம்ப் நிறுத்தி வைத்துள்ளார். எனினும், இந்த வரிவிதிப்புப் பட்டியலில் சீனாவை மட்டும் ட்ரம்ப் தவிர்த்துள்ளார். மேலும், அந்த நாட்டுக்கு தொடர்ந்து வரிவிதிப்பையும் அதிகரித்து வருகிறார்.

பதிலுக்குச் சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான வரிவிதிப்பை உயர்த்தி வருகிறது. தற்போது, சீனப்பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 145 சதவீதமாக உயர்த்திய நிலையில் அதற்கு சீனா, அமெரிக்க பொருட்களுக்கான வரியை 125 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தான் அமெரிக்காவுக்கு கனிமங்கள், முக்கிய உலோகங்கள், காந்தம் போன்ற பொருட்களின் ஏற்றுமதியை சீனா நிறுத்தியுள்ளது. இதனால் ஆயுதங்கள், மின்னணுவியல், வாகன உற்பத்தியாளர்கள், விமான உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிற பயன்பாட்டுக்கான பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலக்கூறுகள் இன்றி உற்பத்திகள் முற்றிலும் தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான வர்த்தகப் போரில் சீனா ஏற்றுமதிக்கு புதிய நெறிமுறைகளை வகுத்து வருகிறது. ஏற்கனவே, கார்கள் முதல் ஏவுகணைகள் வரை தயாரிக்கத் தேவையான காந்தங்கள் மற்றும் மூலக்கூறுகளின் ஏற்றுமதி சீனத் துறைமுகங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

சீனாவின் புதிய நடைமுறைகள் அமுலுக்கு வரும்போது, அமெரிக்காவின் இராணுவத் தளவாட உற்பத்தி உட்பட பல நிறுவனங்களின் உற்பத்திகள் தடைப்படும் அபாயம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அரிய பூமி உலோகங்கள் காந்தங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மின்சார கார்கள், ட்ரோன்கள், ரோபோக்கள், ஏவுகணைகள், விண்கலம், பெற்றோலில் இயங்கும் கார்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பல வகையான மின்சார மோட்டார்களுக்கு இந்த வகையான அரிய உலோகங்கள் மிகவும் அவசியமாகும்.

தற்போது திடீரென இந்த வகை உலோகங்கள், அரிய மண் தாதுக்களை ஏற்றுமதி செய்ய சீனா கட்டுப்பாடு விதித்திருப்பதால் அமெரிக்க அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்படும் என வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# ஈக்குவடோர் ஜனாதிபதி தேர்தலில் டேனியல் நோபா மீண்டும் வெற்றி



குயிட்டோ, ஏப். 16

ஈக்குவடோர் ஜனாதிபதித் தேர்தலில் டேனியல் நோபா 55. 6 சதவீதம் வாக்குகளைப் பெற்று மீண்டும் வெற்றி பெற்றார்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடோரில் ஜனாதிபதி ஆட்சிமுறை நடைமுறையில் இருக்கிறது. அங்கு ஜனாதிபதியாக டேனியல் நோபா ஆட்சி செய்து வந்தார். அவருடைய பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இதில், ஆளுங்கட்சி சார்பில் டேனியல் நோபா மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து இடதுசாரி கட்சி பெண் வேட்பாளர் லூயிஸ் கோன்சலஸ் போட்டியிட்டார். வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடந்து முடிந்ததைத் தொடர்ந்து உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

இதில், டேனியல் நோபா 55. 6 சதவீதம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட லூயிஸை காட்டிலும் 16, 468 வாக்குகள் அதிகம் பெற்று ஈக்குவடோர் ஜனாதிபதியாக டேனியல் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். எஸ். டோனி அதிரடி ஆட்டம்

# லக்னோ அணியை வீழ்த்தி சென்னை அசத்தல் வெற்றி

லக்னோ, ஏப். 16

எம். எஸ். டோனியின் அதிரடி ஆட்டம் மூலம் லக்னோ அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. லக்னோவில் நடைபெற்ற இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி பந்துவீச்சை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க ஆட்டக்காரரான மார்க்ரம் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து களமிறங்கிய அதிரடி வீரரான நிக்கோலஸ் பூரன் 8 ஓட்டங்களில் வெளியேறினார்.


பின்னர் மிட்செல் மார்ஷ் - அணித் தலைவர் ரிஷப் பண்ட் கூட்டணி நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தது. சென்னை சுப்பர் கிங்ஸ் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி லக்னோ அணிக்கு நெருக்கடி கொடுத்தனர். இதனால், பவர்பிளே முடிவில் லக்னோ 2 விக்கெட்களை இழந்து 42 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது.

பண்ட் - மார்ஷ் கூட்டணி 50 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிரிந்தது. மிட்செல் மார்ஷ் 30 ஓட்டங்களில் ஜடேஜா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஆயுஷ் பதோனி தனது பங்குக்கு 22 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் ரிஷப் பண்ட் நிலைத்து விளையாடினார். பொறுப்புடன் விளையாடி அரைச்சதம் அடித்து அசத்தினார். இறுதிக் கட்டத்தில் அவருடன் கை கோர்த்த அப்துல் சமத் சிறிது அதிரடி காட்ட (11 பந்துகளில் 20 ஓட்டங்கள்) லக்னோ நல்ல நிலையை எட்டியது. அரைச்சதம் கடந்த பண்ட் 63 ஓட்டங்களில் கடைசி ஓவரில் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி 7 விக்கெட்களை இழந்து 166 ஓட்டங்கள் அடித்தது. சென்னை தரப்பில் அதிகபட்சமாக ஜடேஜா மற்றும் பத்திரண தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதனையடுத்து 167 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி சென்னை அணி களமிறங்கியது.

அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஷேக் ரஷீத் - ரச்சின் ரவீந்திரா, அதிரடியாக விளையாடினர். இந்த நிலையில், ஆவேஷ் கான் வீசிய 5ஆவது ஓவரில் ஷேக் ரஷீத் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ராகுல் திரிபாதி 9 ஓட்டங்களில் வெளியேறினார்.



22 பந்துகளில் 37 ஓட்டங்கள் அடித்த ரச்சின் ரவீந்திரா ஆட்டமிழக்க அடுத்து வந்த ஜடேஜா 7 ஓட்டங்களில் வெளியேறினார்.

விஜய் சங்கர் 9 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுக்க 30 பந்துகளில் 56 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் எம். எஸ். டோனி களமிறங்கினார். ஷிவம் துபே நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுமுனையில் டோனி அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தார்.

இதனால், இறுதி ஓவர்களில் ஆட்டம் சென்னை அணிக்கு சாதமாக திரும்பியது. ஆவேஷ் கான் வீசிய 20ஆவது ஓவரில் ஷிவம் துபே 4 ஓட்டங்கள் அடித்து ஆட்டத்தை வெற்றியுடன் நிறைவு செய்தார். இதையடுத்து 19.3 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 168 ஓட்டங்கள் எடுத்த சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

அணித் தலைவர் டோனி (11 பந்துகளில் 26 ஓட்டங்கள் - 4 பௌண்ட்ரிகள், 1 சிக்ஸர்) மற்றும் ஷிவம் துபே (37 பந்துகள், 43 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். லக்னோ அணியில் ரவி பிஷ்னோய் அதிகபட்சமாக 2 விக்கெட்களை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 2025 ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சென்னை அணி 2ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

# டோனி - ஜடேஜா ஜோடி மாபெரும் சாதனை

லக்னோ, ஏப். 16

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை ஸ்டம்பிக் செய்த பந்துவீச்சாளர் - விக்கெட் காப்பாளர் ஜோடி என்ற சாதனை பட்டியலில் ஜடேஜா - டோனி கூட்டணி முதலிடத்துக்கு முன்னேறியது.

10 அணிகள் பங்கேற்றுள்ள 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில், லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 30ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.


இதில், சென்னை அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் லக்னோ வீரர் ஆயுஷ் பதோனி, ரவீந்திர ஜடேஜா பந்துவீச்சில் எம். எஸ். டோனியால் ஸ்டம்பிங் முறையில் வெளியேற்றப்பட்டார். ஐ.பி.எல். வரலாற்றில் ஜடேஜா பந்துவீச்சில் டோனி ஸ்டம்பிங் செய்து ஒரு வீரரை ஆட்டமிழக்க வைப்பது இது 9ஆவது முறையாகும்.


இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை ஸ்டம்பிக் செய்த பந்துவீச்சாளர் - விக்கெட் காப்பாளர் ஜோடி என்ற சாதனை பட்டியலில் ஜடேஜா - டோனி கூட்டணி முதலிடத்துக்கு முன்னேறியது.

இந்த வரிசையில் ஏற்கனவே அமித் மிஸ்ரா - தினேஷ் கார்த்திக் ஜோடி மற்றும் பிரக்யான் ஓஜா - அடம் கில்கிறிஸ்ட் கூட்டணி தலா 9 முறைகளுடன் முதலிடத்தில் உள்ளன.

ரவிச்சந்திரன் அஸ்வின் - டோனி கூட்டணி 8 முறையுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. (எ)



# ஐ. பி. எல். வரலாற்றில் டோனி புதிய சாதனை



லக்னோ, ஏப். 16

ஐ. பி. எல். வரலாற்றில் 200 முறை ஸ்டம்பிங் செய்த முதல் விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை எம். எஸ். டோனி படைத்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு சென்னை- லக்னோ அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சென்னை அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது.

சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவரும், விக்கெட் காப்பாளருமான டோனி இந்த ஆட்டத்தில் ஆயுஷ் தோனியை ஸ்டம்பிங் செய்து வெளியேற்றினார். இதன் மூலம் அவர் ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி தொடரில் விக்கெட் காப்பாளராக ஆட்டமிழக்கச் செய்தோரின் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்தது. இதன் மூலம், ஐ.பி.எல். வரலாற்றில் 200 முறை ஸ்டம்பிங் செய்த முதல் முதல் விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை டோனி படைத்தார். (எ)

# டில்லி அணி தலைவர் அக்சருக்கு அபராதம்

புதுடில்லி, ஏப். 16

டில்லி அணியின் தலைவர் அக்சர் பட்டேலுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் டில்லியில் உள்ள அருண்ஜெட்லி மைதானத்தில் நடந்த 29ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் மும்பை அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் டில்லி அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கவில்லை. இதனால், அந்த அணியின் தலைவர் அக்சர் பட்டேலுக்கு போட்டி கட்டணத்திலிருந்து இலங்கை மதிப்பில் 42 இலட்சம் ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (எ)



# அவுஸ்திரேலிய வீரர் அடம் ஸம்பா விலகல்

ஹைதராபாத் அணிக்கு பின்னடைவு

ஹைதராபாத், ஏப். 16



அவுஸ்திரேலிய வீரர் அடம் ஸம்பா காயம் காரணமாக நடப்பு ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். இதனால், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் முன்னாள் சம்பியனான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 6 போட்டிகளில் விளையாடி 4 தோல்வி, 2 வெற்றியுடன் புள்ளிப் பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளது.

அதிரடிக்கு பெயர் போன ஹைதராபாத் அணி இம்முறை துடுப்பாட்டம் மட்டுமின்றி பந்துவீச்சிலும் தொடர்ந்து சொதப்பி வருகிறது. இதனால், எதிர்வரும் போட்டிகள் அந்த அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த நிலையில், ஹைதராபாத் அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் விதமாக முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அடம் ஸம்பா காயம் காரணமாக நடப்பு ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளார்.

அவருக்குப் பதிலாக கர்நாடகாவை சேர்ந்த ரவிச்சந்திரன் ஸ்மரன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை முறைமையை...

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை தற்போது அனுபவித்துவரும் இலங்கை அதன் ஏற்றுமதி சந்தைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் இதை யொத்த சவாலை எதிர்நோக்குகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிக்குறைப்பு சலுகையை இலங்கை தொடர்ந்து அனுபவிக்க வேணாடுமானால், மனித உரிமைகள் தொடர்பான 27 விசேட மான சமவாயங்களை உறுதியாகப் பின் பற்றவேண்டும் என்ற நிபந்தனை இருக் கிறது. அமெரிக்கா, சீனா, ஐரோப்பா அல்லது இந்தியா என்று எந்த முக்கிய மான வல்லரசுடனும் ஒத்துழைப்பு உறவுமுறை ஒன்றைக் கொண்டிருக்க வேண்டியது அவசியானது என்ற யதார்த்த நிலையை ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கு அரசியல் தலைமைத்துவம் உட்பட இலங்கையர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்ந்து கிடைப்பதற்கு இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யவேண்டும் என்ற நிபந்தனையை விததந்துரைக்கும் தீர்மானம் ஒன்றை ஐரோப்பிய பாராளுமன்றம் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது என்பதை தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்ட விரும்புகிறது.1979 ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் அடாத்தான கைதுகள், நீண்ட கால தடுப்புக்காவல், மட்டப்படுத்தப் பட்ட நீதித்துறை மேற்பார்வை, சந்தேக நபர்கள் பொலிஸாருக்கு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படை யாகக் கொண்டு அவர்களை குற்றவாளி களாகக் காண்பது ஆகியவற்றுக்கு அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண் டிருப்பதன் காரணத்தினால் பரந்தளவில் மிகவும் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி வந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வரலாறு ஒன்று இருக் கிறது. விசாரணைகளை துரிதப்படுத் தாமல், அரசாங்கங்கள் ஆட்களை நீண்ட காலத்துக்கு தடுத்து வைப்பதற்கும் பயங் கரவாத தடைச்சட்டம் அனுமதித்திருக் கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக வாக்குறுதிய ளித்தது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான விதப்புரை களைச் செய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நீதியமைச்சர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீக ரித்திருப்பதாக பிரதமர் ஹரிணி அமர சூரிய பாராளுமன்றத்தில் செய்த அறிவிப்பை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது. பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாமலேயே குற்றச்செயல் களைக் கையாளக்கூடிய சட்டங்கள் இருக்கின்றன. அவை மிதமிஞ்சியவை யாக உள்ளன என்று பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில், அந்த சட்டத்தை ஒழிப்பது தொடர்பாக ஆராய குழுவொன்றை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை புதுப்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வித்தக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு காலத்தை இழுத்தடிக்கும் ஒரு செயற்பாடாக நோக்கப்படக்கூடாது.

காணாமல்போனோர் தொடர்பான பிரச்னை, போர்க்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்காலத்தில் இராணுவத்தினால் கையகப்படுத்தப் பட்ட காணிகளை அவற்றின் உரிமை யாளர்க்ளுக்கு திருப்பிக் கையளித்தல் போன்ற நீண்ட கால பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு துரிதமானதும் பயனுறுதியுடையதுமான நடவடிக் கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் ஒன்றின்போது பிரதமர் அமரசூரிய மீண்டும் மோதல்கள் மூலம் மக்களுக்கு சுமையை ஏற்றக்கூடாது என்றும் நாடுபூராவும் சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் உறுதிசெய்வதில் அரசாங்கம் பற்றுறுதி கொண்டிருக்கிறது என்றும் கூறியதையும் நாம் வரவேற்கி றோம். பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக பாது காப்பு காரணங்களுக்காக மூன்று தசாப் தங்களுக்கும் அதிகமான காலமாக மூடப்பட்டிருந்த முக்கியமான வீதி ஒன்று மீண்டும் மக்களின் பாவனைக்கு திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

அதேவேளை, இந்திய பிரதமர் நரேந் திர மோடியுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டி ருக்கும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படும் என்று கூறியதையும் தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

பயங்கரவாத தடைச்சட்ட விடயத் தில் செய்ததைப் போன்று மாகாணசபை முறையை வலுப்படுத்துவது குறித்தும் மாகாணங்களின் ஆளுநர்களின் அதிகா ரங்களை குறைத்து மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை வலுவூட் டமுகமாக கூடுதல் அதிகாரங்களையும் நிதி வளங்களையும் ஒதுக்கீடு செய்வது குறித்தும் ஆராய்வதற்கு அமைச்சர்கள் மட்டக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் வலியுறுத்து கிறோம்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக பொருளாதாரத் தையும் பரந்தளவில் நாட்டையும் முன் னேற்றுவதில் மனப்பூர்வமாக பங்கேற்கக் கூடியதாக நாட்டு மக்களினதும் சர்வ தேச சமூகத்தினதும் நம்பிக்கையை வென் றெடுக்க முடியும்-என்றுள்ளது. (அ)

## சட்டவிரோதமாக...

ஒளி பாய்ச்சி மீன்பிடித்த அதே பகுதியை சேர்ந்த 10 பேர் நான்கு படகுகளுடனும் உடைமைகளுடனும் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

மேலும், ஒரு படகில் மூன்று பேர் சட்டவிரோதமான முறையில் இரவு நேரத்தில் கடல் அட்டை பிடித்தபோது கைது செய்யப்பட்டனர். (அ)

## அமெ. பரஸ்பர...

ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக் கவினால், அமெரிக்க ஜனாதிபதிக்கு உடனடியாக கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த வரி விதிப்பி னால் உலக பொருளாதாரத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய பாதிப்பின் காரணமாக, புதிய வரி அமுலாக்கத்தை 90 நாட்களுக்கு அமெரிக்கா ஒத்திவைத்தது.

இந்த காலத்தை ஆறு மாதங்களாக நீடிக்குமாறு இலங்கை அரசாங்கம் அமெ ரிக்காவிடம் கோரிக்கை விடுக்கவிருப் பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதி களை அதிகரிப்பதன் ஊடாக, இரு நாடு களுக்கும் இடையிலான வர்த்தக இடை வெளியைக் குறைத்து, வரிச் சலுகையை பெறுவது குறித்தும் ஆராயப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த 2024 ஆம் ஆண்டு 3.4 பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகம் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கைக்கு அமெரிக்காவிலிருந்து 368.2 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களே இறக்குமதி செய்யப்பட்டன. எனினும், இலங்கை 3 பில்லியன் டொலர் பெறுமதி யான பொருட்களை ஏற்றுமதி செய்துள் ளது. இந்த வர்த்தக இடைவெளியே அமெ ரிக்க அரசாங்கத்தின் கரிசனைக்குரிய தாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அதனை நிவர்த்தி செய்யும் வழிகளை இலங்கை அரசாங்கம் ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஏற்பாட்டில் மருதனார்மடத்தில் புதுவருட கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 16

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் விளையாட்டுத் திணைக் களம், சுற்றுலாப் பணியகம் மற்றும் வலிதெற்கு பிரதேச சபை இணைந்து நடத்தும் வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூ ரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ. பத்திநாதனும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (அ)

## வாக்காளர்...

இந்தநிலையில் குறித்த தேர்தலுக் கான அஞ்சல் மூல வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் ஏற்கனவே அஞ்சல் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், சுமார் 250 உள்ளூ ராட்சி நிறுவனங்களில் திட்டமிட்டபடி மே மாதம் ஆறாம் திகதி தேர்தல் நடை பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## மக்களின்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி பொய்யுரைப்பதை பிரதான அரசியல் கொள்கையாகவும், முழுநேர வேலையாகவும் கொண்டுள்ளது. ஆட்சிக்கு வந்ததன் பின்னரும் பொய் யுரைப்பதையும்,மக்களை தவறாக வழி நடத்துவதையும் அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக்களின் அடிப்படை பிரச்னைகள் எதற்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. சமூக கட்ட மைப்பில் காணப்படும் எந்த பிரச்னை களுக்கும் அரசாங்கம் தீர்வு பெற்றுக் கொடுக்கவில்லை.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு பெரும் பான்மை பலத்தை வழங்கினார்கள். எதிர்க்கட்சிகளை முடக்குவதற்காகவே இந்த அரசாங்கமும் பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்துகிறது. மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏன் பெரும்பான்மை பலத்தை பயன்படுத்த முடியாது- என்றார். (அ)

## கம்மன்பிலவை...

நேற்று முன்தினம் மதியம் குற்றப் புலனாய்வுத்துறையில் பிள்ளையானை சட்டத்தரணி உதய கம்மன்பில சந்தித்து பேசினார். இதன்போது பொலிஸாரும் அவர்களுடன் இருந்தனர்.

அவர் நேற்று ஊடகங்களை சந்தித்த பின்னர், பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுததாக தகவல் வெளியாகியுள்ளது.

தன்னை ஆட்கடத்தல் வழக்கில் கைது செய்து, தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி விசாரணை நடத்துவ தாகவும், தன்னை அரச தரப்புச் சாட்சி யாக்க ஒப்புதல் வாக்குமூலமளிக்க வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

புலிகளுடனான போரில் தன்னை அரசுகள் பயன்படுத்திவிட்டு தற்போது கைவிட்டுவிட்டதாகவும், முதுகு வலியு டன் தரையில் படுத்துத் தூங்குவதாகவும் தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது.

பிள்ளையான் அண்மையில் மட்டக் களப்பில் குற்றப் புலனாய்வுத் துறை யினரால் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது பயங்கரவாதத் தடைச் சட் டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைக்கப் பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (அ)

## வரவுள்ள...

மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப் பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். இந்த சட்டத் துக்கு எதிராகவே நாங்கள் செயல்பட் டோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கும், நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய சட்டத்தை இயற்றுவதற்கும் கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்து தீவிர கரிசனை கொண்டுள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம். காலம் காலமாக தொடரும் இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சிறப்பு ஆணை வழங்கியுள்ளார்கள்.

பொருளாதார ஸ்திரப்படுத்தலுடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

## தேசிய மக்கள்...

திட்டங்களை நிறைவேற்ற அவகாசம் கிடைத்தால், எதிர்க்கட்சியினருக்கு எதிர் காலம் இல்லையென்பதை உணர்ந்து, அவர்களே இப்போது அரசை கவிழ்க்க கும்பலாக சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார்.

மேலும், எதிர்க்கட்சியினர் இரண்டு விடயங்களுக்காக அரசாங்கத்தின் மீது அச்சம் கொண்டுள்ளனர். இந்த அரசு நாட்டை எட்டி உயர்த்தும் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த அரசாங்கத் துக்கு கால அவகாசம் கொடுத்தால், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும், அதன் பிறகு மக்கள் எதிர்க்கட் சியினரை மீண்டும் ஏற்றுக்கொள்வதில்லை. அதனால் முன்னதாகவே அரசை வீழ்த்தி தடுப்பதே அவர்களின் இலக்கு -என்றார். (அ)

## பிள்ளையானை...

பட்டியலொன்று காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், கைது செய்யப்பட்டு சிறைக்கு செல்லும் எவரும் தாம் குற்றம் இழைத்து விட்டதாக கூறுவதில்லை. தான் திருடிய தாகவோ அல்லது கொள்ளையடித்ததா கவோ எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார் கள். கைது செய்யப்படு நபர்கள் அரசியல் பழிவாங்கல் என தங்களது குற்றங்களை நியாயப்படுத்தி வருகின்றனர்.

ஊடகங்களில் இவ்வாறு கூறினாலும் நீதிபதியின் முன்னிலையில் இவ்வாறு அரசியல் பழிவாங்கல் என கூற முடியாது. இவ்வாறு குற்றம் சுமத்துவோருக்கு இன் னும் ஒன்றிரண்டு ஆண்டுகளே இவ்வாறு அரசாங்கத்தின் மீது பழி சுமத்த முடியும். மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப் பட்டதன் பின்னர் இவ்வாறு பழி சுமத்த முடியாது -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கள் இறக்க தென்னையில் ஏறியவர் கீழே தவறி விழுந்து உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், ஏப். 16

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்றுகள் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் கீழே தவறி விழுந்து உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டை சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் தென்னை மரத்தில் ஏறியபோது, தென்னையில் கட்டப்பட்டிருந்த தேங்காய் மட்டை கழன்று விழுந்தமையால் நிலை தடுமாறி மரத்திலிருந்து கீழே தவறி விழுந்தார்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்கெடுப்பு தாமதம்

கொழும்பு, ஏப். 16

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்கெடுப்பு தாம தமாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்காக எதிர்வரும் மே 06 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவினால் தபால்மூல வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்தது.

தற்போது குறித்த வழக்கின் தீர்ப்பை ஆய்வு செய்து அரச அச்சகத்துக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 22, 23, 24 ஆகிய தினங்களில் நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும். (அ)

# செம்மணி புதைகுழியை தோண்ட தயக்கம் காட்டுகிறது அநுர அரசு!

## கஜேந்திரகுமார் எம்.பி. சாடல்

கொழும்பு, ஏப். 16



**போர்க் காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத அப்போதைய ஜே. வி. பி. என்கின்ற தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளை மூழ்கடிக்கும் முயற்சியே செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி அகழ்வை மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 600இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் செம்மணியில் புதைக்கப்பட்டமை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த பகுதி மறைக்கப்பட்டு இரவு இரவாக கனகர வாகனங்கள் மூலம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதனை மூடிமறைப்பதற்கும் ஆதாரங்களை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் அப்போதைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதேபோன்று தற்போதைய ஜே.வி.பி. என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனை அகழ்வதற்கு அனுமதி வழங்காது இழுத்தடிப்பு செய்கின்றது. அரசாங்கத்தை பொறுத்தவரை மனிதப் புதகுழி ஒன்றை அகழ்வதற்கு 20 இலட்சம் ரூபாய் என்பது சிறிய தொகை. அதனை வழங்குவதற்குக்கூட தற்போதைய அரசாங்கம் அக்கறை செலுத்தாது இழுத்தடிப்பு செய்கிறது.

குறித்த மனிதப் புதைகுழியை தமிழ் பேராசிரியர் ஒருவர் ஆய்வு செய்வதற்காக அமர்த்தப்பட்ட நிலையில் அவரைக் கூட தற்போதைய அரசாங்கம் மாற்றுவதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே.வி.பியினர் தொடர்பில் தமிழ் மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இறுதி போர்க்காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத இராணுவத்துக்கு ஆட்களை திரட்டி தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைகளை மேற்கொண் டவர்கள்.

பெயரை மாற்றிக் கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை தரப் போகிறோம் என மக்களை ஏமாற்றி தமது சிங்கள ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றிய வண்ணம் உள்ளனர். இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும் சர்வதேச விசாரணைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதற்கு தற்போது பட்டலந்த விவகாரம் மிகச் சரியான உதாரணமாகும்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அறிந்த விவகாரமாக பட்டலந்த விவகாரத்தைக் கொள்ளலாம். பட்டலந்த வீட்டுத்திட்ட குடியிருப்பில் சித்தரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தோழர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரப்புக்களை இணைத்து மேற்கொள்வதற்கு தயார் எனக் கூறுகிறார்கள்.

இதிலிருந்து என்ன விளங்குகிறது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான இனப்படு கொலைகளை சர்வதேச நீதியில் விசாரிப்பதற்கு மறுத்து உள்ளூர் விசாரணை மூலம் தீர்வு எனக் கூறுகிறார்கள்.

ஆனால், பட்டலந்தவில் படுகொலை செய்யப்பட்ட தமது ஜே.வி.பி தோழர்களுக்கு சர்வதேச தரப்புகளை அழைத்து விசாரணைக்குத் தயார் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கும் போர் குற்றங்களுக்கும் ஏன் சர்வதேச விசாரணைகளுக்கு மறுக்கிறார்கள். ஆட்சி பொறுப்பை ஏற்று ஆறு மாதங்கள் கடந்து செல்கின்ற நிலையில் ஜே.வி.பி என்கின்ற தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தத்துவார்த்த நீதியாக தமிழ் மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆகவே, தமிழ் மக்களை தத்துவார்த்த ரீதியாக அழிப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்களை வகுத்துக் கொடுத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் விரட்டியடிப்பதற்கான காலம் கனிந்துள்ளது-என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷர்கள் திடீர் சந்திப்பு!





கொழும்பு, ஏப். 16

அரசியல் மட்டத்தில் தற்காலிக ஓய்வைப் பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷர்கள் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காக சென்றார்.

இந்த சந்திப்பு விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக மகிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அதில், "எனது சகோதரர், முன்னாள் ஜனாதிபதி கோட் டபய ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ ஆகியோர் எனது உத்தியோகபூர்வ இல்லத்தில் என்னைச் சந்திக்க வந்தனர், நாங்கள் மிகவும் அன்பான உரையாடலை மேற்கொண்டோம்.

புத்தாண்டு தினத்தன்று அவர்கள் கைகளில் வெற்றிலையுடன் வருவதைப் பார்த்தபோது, பக்மாவில் உறவினர்களை பார்க்கச் செல்லும் சம்பிரதாயமே எனக்கு நினைவுக்கு வந்தது. அவர்கள் இருவருக்கும் வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிகழ்வில் பல நண்பர்களும் கலந்து கொண்ட னர், அவர்களுக்கு வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துகள்" என அவர் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை தனது குடும்பம் மற்றும் பேரக்குழந் தைகளுடன் புத்தாண்டை கொண்டாடிய ஒளிப்படங்களையும் மகிந்த தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## லலித், குகனுக்குக்கூட இன்னும் நீதியை வழங்க முடியாத அரசு!

## லீலாதேவி குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 16

ஜே.வி.பி தோழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு தீர்வை முன்வைக்க முடியாத தற்போதைய அரசு தமிழ் மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எவ்வாறு தீர்வைப் பெற்று தருவார்கள் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் பொறிமுறையின் மூலம் தீர்வைத் தரப்போவதாக கூறிய கருத்துக்களை அவதானித்தோம்.

உள்ளூர் விசாரணை மூலம் தீர்வைத் தருகிறோம் என காலத்துக்கு காலம் மாறி வரும் அரசாங்கங்கள் வாக்குறுதிகள் வழங்கி வரும் நிலையில் அதனை நாம் துளியளவும் ஏற்கவில்லை.

தற்போது பதவியில் உள்ள அரசாங்கம் உள்ளூர் விசாரணை மூலம் தீர்வை பெற்று தரப் போகிறோம் எனக் கூறுவது அவர்கள் தமது கதிரைகளை தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியாகவே பார்க்கிறோம்.

தற்போது ஆட்சியில் உள்ள ஜே. வி. பி. அரசாங்கம் இலங்கையில் தமது தோழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு தீர்வை பெற்றுத்தர முடியாத காரணத்தால் அவர்களின் உறவுகள் இன்றும் ஐ.நாவில் நீதி கோரிச் செல்கிறார்கள். குற்றவாளிகள் யார் என அரச உயர் மட்டம் வரை தெரிந்த நிலையில் அவர்கள் இன்று வரை கைது செய்யப்படவில்லை - என்றார். (அ)

1-12.PDF:11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.